பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 21 ஞாயிற்றுக்கிழமை [05-01-1992] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 40

# சாகும் வரை உண்ணாவிரதம்
# 225 தமிழ் கைதிகள் அறிவிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறது நாடாளுமன்ற குழு

கொழும்பு, ஜனவரி 5

கொழும்பு நியூ மகஸின் சிறைச்சாலையில் உள்ள 225 தமிழ்க் கைதிகள், விசாரணையின்றி தங்களைத் தடுத்து வைத்திருப்பதை ஆட்சேபித்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக முன்னறிவிப்புச் செய்திருக்கிறார்கள்.

இதனையடுத்து அவர்கள் சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு மனித உரிமைகள் தொடர்பான நாடாளுமன்றக் குழு ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

1990 ஜூன் சண்டை ஆரம்பித்த பின்னர் கிழக்கு மாகாணம், யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் மலையகப்பகுதிகளில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 205 தமிழ் இளைஞர்களும், அதற்கு முன்னர் கைதாகிய 20 பேருமாக மொத்தம் 225பேர் கொழும்பு நியூ மகஸின் சிறையில் உள்ளனர்.

அவர்கள் தமது அவல நிலையை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரும்படி கோரி எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டார

[5 ஆம் பக்கம் பார்க்க]

## 2 ஆம் நாளாக சேவை இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். குடாநாட்டில் ஓட்டோக்களின் சேவை தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்று இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதனால் பயணிகள் பெரிதும் கஷ்டமுற்றனர். [உ-15]

## முச்சந்தி முரளி



அஹிம்சைப் போராட்டத்தை மதிக்கிற எண்ணம் உவைக்கு உண்டோ...?

## குடாநாட்டைத் தாக்கினால் கண்டனக் குரல்கள் எழும்!

### இராணுவ அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, ஜன. 5

யாழ்ப்பாணத்தைத் தாக்கினால் கண்டனக் குரல்கள் ஒலிக்கும். அதனால் அவதானமாகவே எதையும் செய்ய வேண்டியுள்ளது.

பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைக்குப் பொறுப்பான உயர் இராணுவ அதிகாரி ஒருவர் இப்படித் தெரிவித்ததாக— கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

முன்னறிவிப்பு இல்லாமலேயே யாழ்ப்பாணத்தை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்காவின் பெயரில்
## ஆயுதக் கடத்தல் விடயம்; சிலி தளபதி பதவி நீக்கம்

லண்டன், ஜன. 5

சிலி நாட்டிலிருந்து ஸ்ரீலங்காவுக்கு அனுப்பப்பட்டதாகக் கருதப்படும் 11 தொன் ஆயுதங்கள் யூகோஸ்லேவியாவின் குரேஷிய குடியரசுக்கு கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக சிலி நாட்டின் இராணுவத் தளபதி ஒருவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

ஆயுதங்களுக்குப் பொறுப்பான தலைவர் ஜெனரல் ஹெக்டர் லட்னியர் என்பவரையே சிலி ஜனாதிபதி பட்றீஷியோ எய்ல்வின் பதவி நீக்கம் செய்திருக்கிறார்.

இந்த கடத்தல் நடவடிக்கையில் சிலி நாட்டின் இராணுவ அதிகாரிகள் பலரும் சம்பந்தப்பட்டிருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கிறதாம். (உ-த)

## மண்டைதீவு படையினர் சூடு

யாழ்ப்பாணம், ஜன. 5

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று மாலை 4 மணிமளவில் யாழ். கோட்டைப் பக்கமாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். [ஒ-15]

## இந்திரா சிலை தகர்ப்பு

ஆந்திரா மாநிலத்திலுள்ள ரங்காரெட்டி மாவட்டத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் சிலை நேற்று ஜெலிக்னைட் வெடிகுண்டுகள் மூலம் அதன் பீடத்திலிருந்து தகர்த்தெறியப்பட்டது.

இந்தச் சம்பவத்துக்கு நக்சலைட்டுகள் காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (உ-10)

## அகாலிதள் தீவிரவாதிகள் புலிகளுடன் தொடர்பு!

அகாலிதள் என்றழைக்கப்படும் — பஞ்சாப்பில் தனிநாடு கோரும் — தீவிரவாதக் குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தாங்கள் தொடர்பு கொண்டுள்ளதாக அறிவித்திருக்கின்றனர்.

பஞ்சாப்பில் சக்தி வாய்ந்த இயக்கமான அகாலிதள்ளின் தலைவர் சிம்ரஞ்சித் சிங் மான், பஞ்சாப் தலைநகரான சண்டிகாரில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்தார்.

புதிய இந்தியாவுக்கான சமஷ்டி முன்னணி ஒன்றை அமைப்பதற்காக, இலங்கையில் இயங்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும், இந்தியாவில் ஏனைய பகுதிகளில் உள்ள போராட்ட இயக்கத் தலைவர்களுடனும் தாம் தொடர்பு கொண்டிருப்பதாக அவர் சொன்னார்.

மத அடிப்படை வாதம், இராணுவ, பொலீஸ் அடக்குமுறை, அரச அத்துமீறல்கள் ஆகியவற்றை புதிய முன்னணி எதிர்க்கும் என்றும் அவர் சொன்னார். (உ-ஒ)

## முல்லைத்தீவில் குண்டுவீச்சு! பெண்பலி!! 4வீடுகள்சேதம்!!!

முல்லைத்தீவு மாவட்டம் சிலாவத்தை, தண்ணியூற்றுப் பகுதிகளில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

தண்ணியூற்றில் இடம்பெற்ற தாக்குதல்களினால் அனுசியா (17 வயது) என்ற இளம் பெண் பலியானார் என்றும், அப்பகுதியில் நான்கு வீடுகள் முற்றாக சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## கிழக்கில் இரு சம்பவங்கள்; 4 போராளிகள் வீரமரணம்

கிழக்கில் திருகோணமலையில் போராளி ஒருவரும், மட்டக்களப்பில் மூன்று போராளிகளும் வீரமரணம் அடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் திருகோணமலையில் தவறுதலாக மிதிவெடி ஒன்று வெடித்ததில் லெப்டினன்ட் சக்தி (கனகசிங்கம் சிறிஸ்கந்தராஜா - மூதூர்) என்பவரும் —

மட்டக்களப்பு, சந்திவெளித் திடலில் நடந்த தீவிர மோதல் ஒன்றில் நவாப், சூரி, மகேஸ் ஆகிய மூன்று போராளிகளும் வீரமரணம் அடைந்தனர்.

சந்திவெளித்திடலில் கடந்த புதனன்று மோதல் இடம்பெற்றது என்றும் —

சிலமணி நேரம் நீடித்த இந்த தீவிர மோதலின் போது இராணுவத்தினர் பெரும் இழப்புக்களுடன் பின்வாங்கி முகாமுக்குத் தப்பி ஓடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

# கொக்கட்டிச்சோலையில் பெரும் மோதல் மூண்டது!

### இரு படையினர், மற்றும் மூவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 5

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலை முகாம் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் பெரும் மோதல் மூண்டதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நேரடி மோதலின் போது இரு இராணுவத்தினரும், தமிழ்க்குழு ஒன்றைச் சேர்ந்த மூவரும் சொல்லப்பட்டனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் விடுதலைப் புலிகள் தரப்பில் மேஜர் வினோத் (முருகேசு அசோகன் — கொக்கட்டிச்சோலை) என்ற வீரவேங்கையும் அங்கு களப்பலியானார்.

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் கொக்கட்டிச்சோலை முகாமில் இருந்து மண்முனை நோக்கி ரோந்து சென்றுகொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவ — தமிழ்க்குழு ஒன்றின் கூட்டு அணி மீது புலிகள்

[5 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைத் தொடர்பு ஊழியர் 30பேருக்கு சம்பள நிறுத்தம்?

யாழ்ப்பாணம், ஜன. 5

தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தில் பணிபுரிந்த முப்பது ஊழியர்களுக்கு இம்மாதம் தொடக்கம் சம்பளம் நிறுத்தப்பட உள்ளதாக அறியவருகிறது.

இந்த முப்பது ஊழியர்களும் மூன்று மாதங்களுக்கு முன்னர் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். ஆனால் அவர்கள் போக்குவரத்து கஷ்டங்களைக்காட்டி தமது இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு தலைமை அலுவலகத்துக்கு அப்பீல் செய்திருந்தனர்.

அப்பீல் சம்பந்தமாக எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. ஆனால் உடனடியாக இடம் மாற்றப்பட்ட இடங்களுக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கடமைக்குச் சமுகமளிக்காவிடின் எவ்வித அறிவித்தலுமின்றி இம்மாதச் சம்பளம் நிறுத்தப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தில் நூறுக்கும் சற்று அதிகமான எண்ணிக்கையினர் பணிபுரிகின்றனர்.

அவர்களில் 30 பேருக்கு மட்டுமே இடமாற்றம் கிடைத்திருந்தது.

[அ-3]

## ஆஸ்பத்திரி ஊழியர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவரும் வயிற்றோட்ட நோயினால் மரணமானார்.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்தவரும் ஆஸ்பத்திரி தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலைய ஊழியருமான கே. இராஜசுந்தரம் (வயது 36) என்பவரே நேற்று வயிற்றோட்டத்தினால் மரணமானார்.

(உ-15)

## தமிழ் சாகித்திய விழா

கொழும்பு, ஜன. 5

தமிழ் சாகித்திய விழா எதிர்வரும் ஏப்ரலில் கொழும்பில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

1991 இல் வெளியான நூல்களுக்கு இவ்விழாவில் பரிசுகள் வழங்கப்படும் என்றும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# மருத்துவ பீடத்தை மாற்றும் யோசனைக்கு கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு எடுத்த முடிவை யாழ். பல்கலைக்கழக மாணவரவையும், மருத்துவபீட ஒன்றியமும் வன்மையாக கண்டித்தும் எதிர்த்தும் உள்ளன.

இன்று மருத்துவ பீடத்தில் கை வைக்கும் அரசு, நாளை ஏனைய பீடங்களிலும் கை வைக்கமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? —

ஸ்ரீலங்கா அரசின் இந்தச் செயற்பாடு பல உள் நோக்கங்களைக் கொண்டது. இப்போது போதனா வைத்திய சாலையையும் தரம் குறைந்து, அங்குள்ள மருத்துவ வசதிகளைக் குறைத்து ஒரு இன அழிப்பை செய்வதற்கான திட்டமோ எனச் சந்தேகிக்க வேண்டியுள்ளது— என்று பிரஸ்தாப சங்கங்கள் வெளியிட்ட நீண்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. க. செல்லையா

தோற்றம்: 07-05-1932
மறைவு : 21-12-1987
திதி : 05-01-1992

உங்கள் அன்பும் பண்பும் பாசமும் நிறைந்த நினைவுகளுடனே நித்தமும் வாழ்கின்றோம்.

குடும்பத்தினர்

678, சண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(19132)

## நாவலர் கல்வி கழகம்

Naavalar Kalvi Kalaham

நாவலர் வீதி, நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி.

ஆண்டு 1 முதல் ஆண்டு 11 (O/L) வரை
உள்ள வகுப்புகளுக்கான சகல பாடங்களும்
நடைபெறுகின்றன.

### புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 7-1-1992

ஆண்டு 5இற்கான புலமைப் பரிசில் வகுப்புகளும்,
இலவச பரீட்சையும் நடைபெறுகின்றன.

[19133]

## ஆறாம் மாதத் தேறுதல் நினைவுகள்



செல்வி
### பத்மசோதி சண்முகநாதபிள்ளை (கப்டன் வானதி)

தாயின் மடியில்: 19 - 02 - 1964
தாயக மண்ணில்: 11 - 07 - 1991

பெற்றஅந்
பெரிதுவக்
நற்றவப்
நறுந்தமிழ்
கற்றவர்
கவிதையின்
செற்றவர்
செருக்களத்
அற்புதக்
அன்பினால்
பொற்புற
புகழுடன்
சொற்பதம்
சுந்தரப்
நிற்குமந்
நிலைபெற

நாளின்
கின்றோம்
பேறே!
வீரப்
போற்றும்
ஊற்றே!
செருக்கை
அழித்த
கோலம்
ஆண்ட
நின்று
வாழ
கடந்த
பணிகள்
நாட்க
எழுந்து

மேலாய்ப்
அம்மா!
''சோதி''!
பெண்ணே!
செஞ்சொற்
மாற்றே!
எல்லாம்
பாவாய்!
நீடி
சேயே!
எம்மைப்
வைத்தாய்!
உந்தன்
ஈழம்
வெல்லாம்
நிற்கும்!

குடும்பத்தினர்.

174, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(19120)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
### செல்வி ஸ்ரீதேவி கைலாயபிள்ளை

தோற்றம்: 2-9-1959
மறைவு: 17-12-1990

அன்புத் திருமகளே அருமையான ஸ்ரீதேவி நீ மறைந்து ஓராண்டு முடிந்து விட்டது. ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் எங்கள் கவலை மாறாது. எங்கள் அன்பு குறையாது. எங்கள் மனதில் அழியாத இடத்தைப் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறாய்.

உனது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

தந்தை, தாய்,
சகோதரிமார், அத்தான்

வேலணை-5
14/4, [illegible]
யாழ்ப்பாணம். [19134]

5-1-92 இன்று பி. ப. 2 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில்

கலைக்கல்லூரியின் நிதி உதவிக்காக:

இலங்கைவேந்தனின் 'கதகளி பரதநாட்டியம்'

200க்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதிய அராலியூர் சுந்தரம்பிள்ளையின் 22 ஆவது மேடை நாடகம்

## "போர் முரசம் கேட்கிறது"



படத்தில் இலங்கை வேந்தனின் நடனத் தோற்றம்.
அன்பளிப்பு: அண்ணா தொழிலகம், இணுவில்.

(19115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணணிகள் தேவை
## (Computers)

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கணனி (Computer) கல்வி நிறுவனத்திற்கு கணணிகள், கணணியின் உபபாகங்கள் [Key-boards, V.D.U., Printers] என்பன தேவைப்படுகின்றன. பூரண விவரங்களுடன் 15-1-1992 க்கு முன்னர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**379, C/o உதயன், யாழ்ப்பாணம்.**

(19109)

## பவுண் விலை குறைப்பு

எமது ஸ்தாபனத்தில் [4-01-1992] நேற்று முதல் விலைப்பட்டியலில் பவுண் விலை குறைக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| தரம் | 22 | மாற்று (கரட்) | | 5300/- |
| ,, | 21 | ,, | ,, | 5000/- |
| ,, | 20 | ,, | ,, | 4800/- |
| ,, | 18 | ,, | ,, | 4400/- |

## தமிழ்ப் பரிதி நகைமாடம்

இல. 15, புதிய சந்தை,
சாவகச்சேரி.

[19121]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் முத்தர் இரத்தினம்

**தோற்றம்: 2-10-1905** **மறைவு: 6-12-1991**

ஆலம் விழுதுகளாய் இத்தரணியில் நாம்
சீலமுடன் வாழ வழி சமைத்த - ஐயா!
காலத்தால் உம் பணி முடித்துச் சென்ற - உங்களை
ஞாலம் உள்ள வரை நாம் மறவோம் - ஐயா!

நின் குறுஞ்சிரிப்பு எம் நெஞ்சை விட்டு நீங்கவில்லை
நின் வதனம் எம் நினைவுகளில் நிலைத்திருக்கும்- ஐயா!
நித்தம் நின் திருவாயால் மொழிந்த இறைவனின் திருநாமங்கள்
நித்திய பரம்பொருளின் ஜோதிக்குள் உமைச்சேர்க்கும் - ஐயா

எம் வாழ்வுக்கு ஒளி விளக்காய் நின்று, அன்புடன் வழிகாட்டி, பண்புடன் வாழ வைத்த தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

83/2, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

[19107]

## அரியாலை வாசி மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 5

சைக்கிளில் இருந்து விழுந்து தலையில் காயமடைந்ததாகக் கூறப்படும், அரியாலை வாசி ஒருவர் நேற்று முன் தினம் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

கடந்த வியாழனன்று வீதியில் விழுந்து காயமடைந்தார் என்று கூறி, அன்றையதினம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்த இவர், மயங்கிய நிலையிலேயே தொடர்ந்து இருந்தார் என்றும் —

மறுநாள் காலை மரணம் சம்பவித்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் எஸ். இராசையா [60 வயது] என்பவர் ஆவார். [ஓ-15]

## ECALOM
(மனோகராச் சந்தி)

## A/L - 93
**புதிய பிரிவு II**

## பொருளியல்
**— உதயன்**

செவ்., வியாழன் 4 மணி

**ஆரம்பம்:**
**07 - 01 - 1992**

(4480)

## யாழ் உயர்கலைக் கல்லூரி

[கல்விப் பகுதியினரின் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பெற்ற உதவி நன்கொடை பெறாத சிரேஷ்ட பாடசாலை]

## புதிய அனுமதிகள் - 1992

**O/L, A/L கலை, வர்த்தக பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.**

**5-1-1992க்கு முன் கல்லூரி அலுவலகத்தில் அனுமதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.**

**ஆரம்பம்: 6-1-1992 (8.30)**

- பதிவாளர்.

73, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.

[சி/1248]

## நன்றி நவிலல்

செல்வி
**சண்முகநாதன் தனேஸ்வரி**
(லவா)

பிரம்படி, கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் சி. சண்முகநாதன், தங்கரத்தினம் ஆகியோரின் கனிஷ்டப் புத்திரி செல்வி சண்முகநாதன் தனேஸ்வரி 16 - 12 - 1991 இல் அகால மரணமடைந்த போது, பலவகைகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், ஆறுதல் அளித்தவர்களுக்கும், 17 - 12 - 1991 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இறுதிச் சடங்குகளில் பங்கு பற்றிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— குடும்பத்தினர்.

பிரம்படி, கொக்குவில்.

[18999]

## யாழ். றோட்டரிக் கழகம்

நடத்தும்

## போலியோ (இளம்பிள்ளை வாதம்) தடுப்பு சுவரொட்டி (போஸ்டர்) / சுலோகப் போட்டிகள்

**போலியோ நோயின் ஆபத்தை விளக்கவும், அது குறித்து மக்கள் விசேடமாக இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வைத் தூண்டவும்.**

**உதயன் வெளியீட்டகத்தின் ஆதரவுடன்**
**இப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.**

சுவரொட்டிகளும், சுலோகங்களும் —
போலியோ தாக்குவதால் ஏற்படும் விளைவுகளை எடுத்துக் காட்டுவதுடன் —
நோய் பிள்ளைகளைத் தாக்காது தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கு மக்களைத் தூண்டும் கருத்துக்களை வெளிக்கொணர வேண்டும்.

● **பரிசுகள், சுவரொட்டி, சுலோகம் ஆகிய இரண்டு பிரிவுகளுக்கும் தனித்தனியாக வழங்கப்படும்.**

| | | | |
|---|---|---|---|
| ★ | முதற் பரிசு | ரூ. | 1000.00 |
| ★ | இரண்டாவது பரிசு: | ரூ. | 750.00 |
| ★ | மூன்றாவது பரிசு: | ரூ. | 500.00 |

☆ பத்து ஆறுதல் பரிசுகளும் உண்டு.

★ பெரும் எண்ணிக்கையான மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க முடிவு திகதி: **31 - 01 - 1992** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

★ போட்டி விதிகளுக்கு 09 - 12 - 1991, 14 - 12 - 1991 திகதிய உதயன் இதழ்களைப் பார்க்கவும்.

★ போட்டிக்குக் கூடுதல் விண்ணப்பதாரிகளை அனுப்பும் பாடசாலைகளுக்கு சிறப்புப் பரிசு ஒன்று வழங்கப்படும்.

[சி-1179]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மலிவு விற்பனை

அப்பியாசக் கொப்பிகளும், பாடசாலை உபகரணங்களும், அழகிய பொங்கல் வாழ்த்து மடல்களும், கலண்டர்களும் ஆகக் குறைந்த விலையில் விற்பனையாகின்றன. துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ், சுன்னாகம்.
[சி-1191]

### அறை தேவை

பயிற்சி ஆசிரியர் இருவர் தங்குவதற்கு திருநெல்வேலியில் அறை வாடகைக்குத் தேவை. தொடர்பு; பொன்ட் கல்வி நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(19117)

### மணமகள் தேவை

யாழ். இந்துப் பெற்றோர் கொழும்பில், வங்கியில் தொழில் பார்க்கும் 34 வயது மகனுக்கு படித்த, அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். இல. 832, C/o, உதயன்.
[4487]

### மணமகன் தேவை

ஏழாம் இடத்தில் செவ்வாயும், சூரியனும் கொண்ட பெண்ணுக்கு மணமகன் தேவை. 32 - 37 வயதுக்கு இடைப்பட்ட அரச, தனியார் துறையில் அல்லது வெளிநாட்டில் தொழில் புரிபவர் விரும்பத்தக்கது. முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இ. தர்மகுலசிங்கம், பாடசாலை ஒழுங்கை, மேற்கு கோண்டாவில்.
[19114]

### தாதிகள் தேவை

பயிற்சி பெற்ற, பயிற்சி பெற விரும்பும் தாதிகள் தேவை. தொடர்பு கொள்க: Dr. இ. விக்கினேஸ்வரராஜா, M. B. B. S. [Cey]. சென்றல் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு.
[19116]

### விற்பனையாளர் தேவை

பாவனைப் பொருட்களை வீடுகளுக்குச் சென்று விற்பனை செய்வதற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். விளம்பரதாரர், 16, 3ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
[சி/1189[

### கலண்டர் - நாட்குறிப்பு

பிரம்மஸ்ரீ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கப்படி எல்லாக் குறிப்புகளும் அடங்கிய ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர். இதுவே விலை குறைவானது. ரூபா 36/- ஆனந்தா நாட்குறிப்பு ரூபா 80/- எங்கும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
[சி/1254]

### வெளிவந்துவிட்டது

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, கணக்கியல் உ. த. [9 வருடம்] வினா - விடை வெளிவந்து விட்டன. பெற்றுக் கொள்ளும் இடங்கள்: அறிவகம் புத்தகசாலை, மணிக்கூட்டு வீதி, சுப்பிரமணியம் புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
[சி-1250]

### அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா, அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
[சி/1256]

### அப்பியாசக் கொப்பிகள்

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள், குறைந்த விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கருகாமை)
(சி/1249)

### O/L கணிதம்

92, 93 ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைகளில் உயர்ந்த பெறுபேறுகளை அடைவதற்குக் கணிதம் கற்பிக்கப்படும். ஆசிரியர், B.Sc., 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி.
(சி/1233)

### மாணவர் அகராதி

ஆங்கிலம் படிக்கிறீர்களா? உங்களுக்கு கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த ஆங்கில, தமிழ் அகராதி 'வரதர் மாணவர் அகராதி' ரூபா 95/- எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம்.
[சி/1253]

### வாரத்தாள் கலண்டர்

அஷ்டலக்ஷ்மி வாரத்தாள் கலண்டரில் பொது அறிவுப் போட்டி பரிசு ரூபா 1,000/- விவரங்களை விற்பனையாளர்களிடம் அறிக.
[4474]

### சோதிடம்

எத்தகைய தீராத கஷ்ட நஷ்டங்களும் தீர அதிஷ்டம் அழைக்கிறது. விநாயகப் பெருமானின் அருட்சக்தி பொய்யா மொழியாக வழங்குகிறது. பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 96, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி, நல்லூர்) பகல் 9 மணி - 2 மணி வரை சந்திக்கலாம்.
[19238]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணக வரவு: 06 — 10 — 1947

விண்ணக அழைப்பு: 06 — 12 — 1991

**சவிரிமுத்து றெஜினோல்ட் ஜெயசீலன்**

[கிளை முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்]

அன்பின் சகோதரனே! ஆருயிர் நண்பனே!
ஆதரவான எம் பணியாளனே
ஈரேழு ஆண்டுகள் எம்முடன் நீயும்,
கூட்டுறவினில் கூடி வாழ்ந்திட்டாய்
கடமையில் சிரமங்கள் ஏற்பட்ட போதிலும்,
குன்றாத உன் குணம் குறுகியதில்லை.
தேவை எதுவெனத் தெரிந்து நீ
செயல்பட்டாய் - எனவே
மங்காது உன் சேவை மக்கள் மனதினிலே
வாட்டிடும் நோயிலும் வாடியதில்லை - நீ
தள்ளாடி வரினும் தாமதம் கொள்ளவில்லை.
நாற்பத்து நாலு ஆண்டுகள் தான் வாழ்ந்தாலும்
நாட்டிவிட்டாய் உன் புகழை எம்மிடமே
உத்தமனே! உன் சேவை பொறுக்காது
காலன் அவனும் கவர்ந்துவிட்டான் - உன் உயிரை.
மாண்டு மறைந்து மாதமொன்றானாலும்
மறவோம் யாம் உன் நினைவதனை.

இவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கும்;

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.**

ப. நோ. கூ. சங்கம்,
ஊர்காவற்றுறை.
[சி-1183]

---

பொதுச் சுகாதாரச் சிதைவும்,
தொற்று நோய்ப் பரவலும்
அதிகரித்துள்ள

## இன்றைய நிலையில்

சுகாதார சேவையாளர்கள்
அகதி முகாம் பொறுப்பாளர்கள்
பாடசாலை அதிபர்கள்
பாலர் கல்வி நிலையப் பொறுப்பாளர்கள்
சனசமூக நிலையத்தார், பெற்றோர்

கைகளிலிருக்க வேண்டிய அத்தியாவசியமான நூல்

**டாக்டர் வே. கிருஷ்ணராசா F.R.C.S**

எழுதிய

## சுகாதார சேவையாளர் கைநூல்

[பக்கம் 143]

முந்திய விலைக்கே விற்கப்படுகிறது ரூ. 58/-

*அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்*

[T. R. R. O.]

**106, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.**

[சி-1173]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 18 — 06 — 1930

உதிர்வு: 05 — 12 — 1991

அமரர்

**வேலுப்பிள்ளை கணேசபிள்ளை**

(காரைநகர்)

[முன்னாள் அரசாங்க ஒப்பந்தகாரர்]

தந்தையாய், குருவாய்
எம் சிந்தையில்
நிறைந்த - அப்பா
இத்துளிர்கள் தழைத்திடத்
தண்ணீர் வார்த்த
அன்பெனும் தீபம் எங்கே?
கடமை, கண்ணியம்
காத்த உம் நெஞ்சம் எங்கே?
விழிகளில் நீரொடு
வழியினைப் பார்த்து நாம்
தவித்திடும் போது - நீங்கள்
வான் நோக்கிச் சென்றதேனோ.

ஆத்மா சாந்தி பெற வேண்டும்;

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிகள்.**

172/3, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
[19249]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# சுய நிலையை உணர வேண்டும்

கூட்டுப் படைகளின் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்குச் சூறாவளி விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். குறிப்பாக வடக்கில் உள்ள எல்லா இராணுவ முகாம்களுக்கும் வந்து, தள நிலைமைகளை நேரில் அறிந்துள்ளார்.

வடக்கில் இந்த வருடத்தில் "பயங்கரவாதம்" ஒழிக்கப்பட வேண்டும் என்ற அரசின் இலக்கை அடைவதற்கு புதிய திட்டம் ஒன்றை வகுப்பதற்கு அவருக்குத் தள நிலைமை தேவைப்பட்டிருக்கலாம்!

நாட்டின் இராணுவச் செலவு பொழுதொரு வண்ணமாக உயர்ந்து கொண்டிருக்கிறது. அதனை அரசாங்கமும், இராணுவ அதிகாரிகளும் அறிவார்கள்.

எனினும், வடக்கு - கிழக்கில் இராணுவ மேலாதிக்க நிலையை எய்த வேண்டும் என்ற எண்ணத்தை அரசு மாற்றத் தயாரில்லை என்பதே உண்மை.

இனப்பிரச்சினை, அரசியல் விவகாரம். வடக்கு - கிழக்கில் நடக்கும் ஆயுதப் போராட்டம் வேறான விடயம். இரண்டையும் ஒன்றாகச் சேர்க்காமல் தனித்தனியாக அணுக வேண்டும். இப்படியான ஒரு நிலைப்பாட்டுப் பின்னணியிலேயே, தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும் என்ற எண்ணக்கரு அதிகார உயர் மட்டங்களில் பரிணமித்து வருகிறதாம்

அதன் அடிப்படையிலேயே வடக்கு - கிழக்கில் போரைத் தொடரவும், இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும் ஏற்பாடுகள் நடைபெறுவதாக அறியப்படுகிறது.

தமிழர்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்பதற்காகவே ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். ஆகையால் தமிழர் பிரச்சினையும், ஆயுதப் போராட்டமும் ஒன்றுடன் மற்றது இணைந்தது என்பது வெளிச்சமானது.

இதனை மற்றப்பக்கத்தால் அணுகி - அதாவது பிரித்துத் தனித்தனியாகப் பார்த்து - தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முனைவதாகக் காட்டி தமிழர்களை அரசின் பொறிக்குள் வீழ்த்தும் சதி முயற்சியே.

மொத்தத்தில், சில தமிழர்களையே தமது கைப்பொம்மைகளாக்கி, தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டதாகக் காட்டிக் கொண்டு சில சலுகைகளை மட்டும் வழங்குவதேயாம்.

ஆகவே இப்போது மிகவிழிப்பாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டியவர்கள் தமிழ் மக்களே. இவ்வளவு பேரிழப்புக்களின் பின்னரும், அற்ப சொற்ப சலுகைகளைக் கண்டு ஏமாந்து விடக் கூடாது. அவற்றை வாங்கித் தருவதாகக் கூறிக்கொண்டு வரும் தரகர்கள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும். தமது சுய நிலையை மறந்து விடக் கூடாது!

# வடக்கு - கிழக்கு இணைப்பு தவிர்க்க முடியாதது - தொண்டா

**கொழும்பிலிருந்து வெளிவரும் 'அருவி' சஞ்சிகைக்கு அமைச்சர் தொண்டமான் சமீபத்தில் பேட்டி அளித்திருந்தார். அப்பேட்டியின் சில பகுதிகள் வருமாறு;**

... யார் எப்படி அறிக்கை விட்டாலும் விடுதலைப் புலிகள் தான் இப்போது போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால் அவர்களுடன் பேசி அவர்களை ஓர் உடன்பாட்டிற்கு வரச் செய்வது தான் முக்கியம்.

நான் ஆரம்பம் முதலே வடக்கு கிழக்கு இணைப்பிற்கு ஆதரவானவன்.

தற்காலிக இணைப்புக்கு எப்போது உடன்பட்டார்களோ அப்போதே இணைப்பு என்பது தவிர்க்க முடியாதது என்று ஆகிவிட்டது.

இணைப்பு என்பது கிழக்கில் நடத்தும் பொதுசன வாக்கெடுப்பால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்கின்ற போது அது முழு நாடும் தீர்மானிக்கும் ஒன்றல்ல என்றாகி விடுகிறது. அதாவது முழு நாட்டிக்குமான ஒரு சர்வசன வாக்கெடுப்பால் அது தீர்மானிக்கப்படுவதாயில்லையே.

வடக்கு-கிழக்கில் உள்ள சிங்கள மக்கள் தாம் அம்மாகாணத்தில் சிறுபான்மையினர் என ஏற்றுக்கொண்டால் அவர்கள் முஸ்லிம்களைப் போல் கவனிக்கப் படுவார்கள்.

ஆனால் அவர்கள் பெரும்பான்மை இனத்தவர்கள் தான் என்று கூறுவார்களாயின் அவர்கள் பெரும்பான்மை இனத்தவர்கள் வாழும் நாட்டின் இதர பகுதிகளுடன் சேர்ந்து கொள்ளட்டும்.

கேள்வி: ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கையளிப்பது என்பது பிரச்சினையாக அமையாதா?

தொண்டமான்: எதற்காக ஆயுதங்களை அவர்கள் எடுத்தார்கள்? உரிமைகளை பெறத்தானே? அந்த உரிமைகள் வழங்கப்படுமானால் ஆயுதங்கள் தேவையில்லையே ஆயுதங்களைக் கைவிட்டு விட்டு பேச்சு வார்த்தைக்கு வருவார்களா? உரிமைக்காக ஆயுதம் எடுத்தவன் உரிமை கிடைக்க முன்னர் ஆயுதத்தைக் கைவிடுவானா? முதலில் உரிமைகளை வழங்கினால் பின்னர் ஆயுதங்களைக் கைவிடுவார்கள்.

கேள்வி; இடைக்காலத் தீர்வு ஏதும் ஏற்பட வாய்ப்புண்டா?

தொண்டமான்: தீர்வொன்று காண முற்பட்டால் முழுமையான தீர்வாக கண்டுவிட வேண்டும். இடைக்காலத் தீர்வு ஒன்றை ஏற்படுத்துப் போனால் அது பின்னர் வேறு பிரச்சினைகள் உருவாக வழி செய்து விடும்.

[இ-எ]

## சாகும்வரை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாயக்கா மூலம் சட்டத்தரணியும் அம்பாந்தோட்டை எம்.பியுமான மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர்.

இந்தக் கடிதத்திலேயே சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதற்கான முன்னறிவிப்பை அவர்கள் வெளியிட்டிருக்கின்றனர்.

இவர்களின் கடிதத்தை அடுத்து —

தடுத்து வைக்கப்பட்டிருப்போர் குறித்து விசாரணை நடத்தி, அறிக்கை சமர்ப்பிப்பதற்கு என நியமிக்கப்பட்டிருக்கும் 'ஜயலத் குழு' முன்பாக இவர்களை ஆஜர் செய்யும்படி —

மனித உரிமைகள் தொடர்பான நாடாளுமன்றக் குழு ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறது.

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னூறுக்கு அதிகமான தமிழ் இளைஞர்களையும் இதேபோன்ற எதிர்ப்பு நடவடிக்கையை அடுத்து, அண்மையில் ஜயலத் குழு உறுப்பினர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கணிசமான அளவு பெண்கள் உட்பட நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு நாட்டின் பல பகுதிகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் —

அவர்கள் தங்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என்று கோரி கிளர்ச்சி நடத்தி வருவதாகவும் மனித உரிமைகள் குழுக்கள் வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ-வீ]

## குடாநாட்டை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நோக்கிப் பாதுகாப்புப் படையினர் நடைபோடுவர். ஆனால் அது இப்போதைக்கு நடக்காது. எனினும் அது ஒரு அதிர்ச்சி வைத்தியமாகவே அமையும்.

இராணுவம் நினைத்தால் எல்லா கனரக வாகனங்களையும் உபயோகித்து யாழ்ப்பாணத்துக்கு எதிரான முழுமையான நடவடிக்கையை ஆரம்பிக்க முடியும். ஆனால் பெருமளவு அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

அப்பொழுது மனித உரிமைக் குரல்கள் ஒலிக்கும். பின்னர் சர்வதேச ரீதியில் கண்டனக் குரல்கள் பிறக்கும். எனவே எமது நடவடிக்கைகளைத் திட்டமிட்டு அவதானமாகவே செய்யவேண்டியுள்ளது.— இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

## கொக்கட்டிச்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

போராளிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர் என்றும் —

இராணுவத்தினருக்கு உதவியாக ஆரையம்பதி, மகிழடித்தீவு முகாம்களில் இருந்து வந்த படை அணி மீதும் விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலைத் தொடுத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**விமானங்கள் குண்டு வீச்சு**

மும்முனைகளிலும் விடுதலைப் புலிகள் பெரும் எடுப்பில் தாக்குதல்களை நடத்தினர். இந்த மோதல்கள் சுமார் ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மேலாக நடந்தன என்றும்—

அப்பகுதிகளில் படையினருக்கு உதவியாக, விமானங்கள், ஹெலி என்பன குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொக்கட்டிச்சோலையில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் 30 பேர் கொல்லப்பட்டதாக நெதர்லாந்து வானொலி அறிவித்தது.

கொல்லப்பட்டவர்கள் யார் என்ற விவரம் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்படவில்லை. (ஒ-எ-10-5)

## 80 ஆயிரம் இலங்கையருக்கு குவைத்தில் வேலை

கொழும்பு, ஜன. 5

குவைத்தில் இவ்வாண்டு 80 ஆயிரம் இலங்கையருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டு முகவர்கள் மத்தியில் பேசுகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தலைவர் டேவிட் சொய்சா இதனைத் தெரிவித்தார். [த-எ]

## இனம்தெரியாத சடலம்

கோப்பாய் — கைதடி வீதியில் உள்ள சுடலையில் 60 வயது மதிக்கத்தக்க இனந்தெரியாத ஒருவரின் — சடலம் நேற்றுக் காணப்பட்டது.

இச்சடலம் பின்னர் தமிழீழ காவல்துறையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றிரவு வரை சடலம் அடையாளம் காணப்படவில்லை. (உ-72-15)

# சிறு பிள்ளைகள் தகராறு வாள் வெட்டில் முடிந்தது!

யாழ்ப்பாணம், ஜன. 5

சிறுபிள்ளைகளுக்கு இடையே உருவான சண்டை, இரு குடும்பத்தவருக்கிடையில் கோஷ்டி மோதலாக மாறி, கத்தி, வாள், கோடரி வெட்டு மற்றும் கல்லெறிச் சம்பவங்களில் முடிவடைந்தது. இதனால் இரு தரப்பிலும் மூன்று பெண்கள் உட்பட எட்டு பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

கொடிகாமம் தவசிகுளம் என்ற இடத்தில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் வாள், கத்தி வெட்டுக்காயங்களுக்குள்ளான இருவர் யாழ். ஆஸ்பத்திரியிலும், கல்லெறியில் காயமுற்ற ஆறுபேர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். [உ-15]

# பாடசாலை மாணவர்கள் 45 பேர் கடத்தப்பட்டனர்

## எம்பிலிப்பிட்டியாவில் சம்பவம்

கொழும்பு, ஜன. 5

எம்பிலிப்பிட்டியா பிரதேசத்தில் 45 பாடசாலை மாணவர்கள் கடத்தப்பட்டு, காணாமற் போய் விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

தங்கள் பிள்ளைகள் கடத்தப்பட்டது குறித்து பக்கசார்பற்ற விசாரணை நடத்துமாறு பெற்றோர்கள் சப்ரகமுவ மாகாண பிரதிப் பொலீஸ் மா அதிபரிடம் கோரியுள்ளனர்.

தங்களது பிள்ளைகளைக் கடத்திச் சென்றவர்களை இனங்காட்ட முடியும் என்றும் பெற்றோர்கள் பிரதிப் பொலீஸ் மா அதிபருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்கள். (அ)

# மாங்குள மின் கோபுரங்கள்; திருத்த படையினர் அனுமதி

மாங்குளத்தில் உள்ள மின் கோபுரங்களைத் திருத்துவதற்கும் அதற்கு வேண்டிய உபகரணங்களை அங்கு எடுத்துச் செல்வதற்கும் இலங்கை மின்சார சபைக்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் இது தொடர்பாக நேற்று முன்தினம் கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவைச் சந்தித்து அனுமதி கோரியிருந்தார் என்றும் —

அதனை அடுத்து திருத்த வேலைகளை மேற்கொள்ளவும், வேண்டிய உபகரணங்களை அங்கு எடுத்துச் செல்லவும் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

## நிரப்பப்படும்

திரு. அத்துலத்முதலி, திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா ஆகியோர் ஐ. தே. கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதால் அமைச்சரவையில் ஏற்பட்ட வெற்றிடங்கள் கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்களைக் கொண்டு நிரப்பப்படலாம் என்று தெரியவருகிறது. [த-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி அகதிகளுக்கு தொடர்ந்து நிவாரணம்

யாழ்ப்பாணம், டிச. 5

அண்மையில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்ற இடைக்காடு, பத்தமேனி, வளலாய், அச்சுவேலிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ள சுமார் 3 ஆயிரம் குடும்பங்களுக்குத் தொடர்ந்து இலவச உலர் உணவு வழங்கப்படும்.

இதற்கான அனுமதி தமக்குக் கிடைத்துள்ளதாக யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து செயலகத்துக்கு அறிவித்துள்ளார். (உ-5)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் நாகம்மா

குரும்பசிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் நாகம்மா அவர்கள் நேற்று [04-01-1992] காலமாகிவிட்டார்.

இவர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சோமசுந்தரம், சேதுராஜா, தம்பிராஜா, செல்வராஜா, சிவராஜா, அருளம்மா, அன்னலக்ஷ்மி, சிவபாக்கியம், காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகராஜா, நாகசௌந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் கதிர்காமநாதன், தாமோதரம்பிள்ளை, கதிர்காமத்தம்பி, ஜெயபாலகிருஷ்ணன், பரமேஸ்வரி, பரமேஸ்வரி [பேபி], மகேஸ்வரி, விஜயலக்ஷ்மி, ரதிதேவி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [05-01-92] முற்பகல் 11 மணியளவில் திருப்பதி, தாளையடிலேன், திருநெல்வேலி [தம்பிராஜாவின் இல்லத்தில்] யில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ. சு. தம்பிராஜா.

தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

[19130]

## இராமலிங்கம் செல்வராசா

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த இராமலிங்கம் செல்வராசா நேற்றுக் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி இராமலிங்கம் [பிரபல வர்த்தகர்] அவர்களின் மூத்த மகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், யோகநாதன் [லிகிதர், இ. போ. ச. கோண்டாவில்], யோகேஸ்வரி [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளச்சந்திரா, நிமல்ராஜா ஆகியோரின் மாமனாரும், நாகராசா, நவரத்தினராசா ஆகியோரின் சகோதரரும், தனேஸ், சுபாஷினி, நிசாந்தன், அனுஷா, மீரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [5-1-92] காலை 9-30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
செ. யோகநாதன்
[மகன்]

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

[19135]

## K. இராஜசுந்தரம் (தேவன்)

K. இராஜசுந்தரம் 04-01-92 நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற கார்த்திகேசு — ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், ஜீவமலரின் அன்புக் கணவரும், கஜேந்தினியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் [மதுபரிபாலன திணைக்களம்], K. பாலசுந்தரம் [காணிப் பதிவகம், மன்னார்], நாகம்மா, லட்சுமி. செல்லம்மா, அன்னம்மா ஆகியோரின் சகோதரரும், வேலுப்பிள்ளை, இராமலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், பத்மநாதன் [யாழ். ஆஸ்பத்திரி A. O.] அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [05-01-92] ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
V. பேரம்பலம்

தும்பளை வீதி,
பருத்தித்துறை.

[ /1193]

# தொண்டர் ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 5

தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசரக் கூட்டம் ஒன்று, நாளை மறுதினம் (செவ்வாய்) முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (ஒ)

# மத்தியஸ்தர் வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் நடத்தும், கிரிக்கெட் விதிகள் சம்பந்தமான பயிற்சி வகுப்புக்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இந்த வகுப்புகள் தொடர்ந்து பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் நடத்திய தேர்வுப் பரீட்சைகளில் சித்தி எய்தியோருக்கான—உடல் வலு பரீட்சை— இன்று காலை 8 மணி முதல் யாழ். இந்து மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. [உ]

# இன்று கலை விழா

கொழும்புத்துறை, ஜன. 5

பாலர் கல்வி பயிலுநர் ஆசிரியரின் கலைவிழா, இன்று பிற்பகல் ஒரு மணிக்கு, யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனமும், போரூட் நிறுவனமும் இணைந்து இவ்விழாவை நடத்துகின்றன. (ஒ-30)

# இடதுசாரி மூத்த தலைவர் காலமானார்

இலங்கையின் இடது சாரி இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரும், லங்கா சமசமாஜக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினருமான எட்மண்ட் சமரக்கொடி நேற்றுக் காலமானார் (ஒ-த)

# வவுனியாவில் பொலீஸ் நிலையங்கள்

வவுனியாவில்மாமடுவிலும், நெலுக்குளத்திலும் புதிதாக இரண்டு பொலீஸ் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்ட இவ்விரு பொலீஸ் நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 40 பொலீஸார் கடமையாற்றுகின்றனர். (உ-5)

## தமிழ் சாகித்திய...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டில் இலங்கைத் தமிழரால் வெளியிடப்பட்ட நூல்களுக்கும், இவ் விழாவில் முதன் முறையாக பரிசளிக்கப்படவிருக்கின்றது என்று கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. [த-எ]

# தொண்டாவின் யாழ் விஜயம் ரத்துச் செய்யப்படவில்லை!

## மாத இறுதிக்கு பின்போடப்பட்டுள்ளதாம்

கொழும்பு, ஜன. 5

உத்தேச யாழ்ப்பாண சமாதான விஜயம் ரத்துச் செய்யப்படவில்லை; பின்போடப்பட்டுள்ளது.

அமைச்சர் தொண்டமான் முன் கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

'விடுதலைப் புலிகள் எங்களது ஆலோசனைகளை ஓர் அடித்தளமாகக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அதை முன்னெடுத்துச் செல்வதில் பலனில்லை. முட்டாள்களும், மைல் கற்களும் மாத்திரம் தான் மாறுவதில்லை. ஏனையவை மாறும் தன்மை கொண்டவை. யாரும் எமது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனைகளை எதிர்க்கலாம்; ஆனால் மாற்று ஆலோசனைகளை முன் வைக்க வருகிறார்களில்லையே.

'ஓர் ஆலோசனைக்கு எதிர்ப்பும், ஆதரவும் கிடைப்பதை ஜனநாயக நியதிப்படி நோக்க வேண்டும். இது ஒரு ஜனநாயக நாடு. எதிர்க்கவும், ஆதரிக்கவும் எவருக்கும் உரிமை உண்டு.

இனப்பிரச்சினைக்கான தீர்வை ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு இம்மாதம் 10ஆம், 21ஆம் திகதிகளில் கூடுகிறது.

அதற்குப் பின்னர்= மாத இறுதியில்— எனது யாழ். விஜயம் அமையலாம்.

—இப்படி அமைச்சர் தொண்டமான் கூறினார்.

விடுதலைப் புலிகள் உங்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பார்களா? என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு—

அது குறித்து எதுவும் கூற முடியாது' — என்று அமைச்சர் தொண்டமான் சொன்னார்.

[இ-எ]

# நூலக தகவல் விஞ்ஞான பயிற்சி நெறி

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் நூலக தகவல் விஞ்ஞான பயிற்சி நெறிக்கு தற்போது விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமிழ்மொழியில், கொழும்பு நகரில் இப்பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

''கல்வி அதிகாரி, நூலகர் சங்கம், 275/75, பௌத்த லோக மாவத்தை, கொழும்பு 7'' என்ற விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என்று அறிவிக்கப்படுகிறது. [த-எ]

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

**(மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம்)**

**வரியிறுப்பாளர்களுக்கு,**

**1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 141ஆவது பிரிவின் கீழ் 1992ஆம் ஆண்டுக்கான**

## ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1992ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் உப அலுவலகங்களில் உரிய காலத்துக்கு முன்பதாக செலுத்தினால் கீழ்க் குறிப்பிட்டபடி விசேட கழிவு வழங்கப்படும். தவறுவோருக்கு கீழ்க் குறிப்பிட்டபடி தண்டம் விதிக்கப்படும்.

1. 1992ஆம் ஆண்டின் 4 கந்தாயங்களுக்கும் 31-01-1992 ஆம் திகதிக்கு முன்னர் வரி செலுத்துபவர்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
2. 1992ஆம் ஆண்டின் ஒவ்வொரு கந்தாயத்திற்கும் முதல் மாத முடிவிற்கு முன்னர் வரி செலுத்துபவர்களுக்கு 5% கழிவு வழங்கப்படும்.

மேற் குறித்த கால எல்லைக்குள் செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்களுக்கு கீழ்க் குறித்தபடி தண்டப் பணம் விதித்து வரியுடன் அறவிடப்படும்.

1. குடியிருப்பு ஆதனமாயின் 15% தண்டப் பணமாக அறவிடப்படும்.
2. ஏனைய ஆதனங்களுக்கு 20% தண்டப் பணமாக அறவிடப்படும்.

எனவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில் ஆதனவரியைச் செலுத்தி சபையின் அபிவிருத்திக்கு உதவுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

க. கனகரெத்தினம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
நகரமண்டபம்,
மானிப்பாய்.
01-01-1992.

[சி-1190]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 5-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org